செ.வெ.எண்.378 நாள்.11.06.2018.

திருநெல்வேலி அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் கோவில் ஆனித்தேரோட்ட திருவிழா முன்னேற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று **(11.06.2018)** அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் கோவில் ஆனித்தேரோட்ட திருவிழா முன்னேற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது–

அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் கோவில் ஆனித்தேர் திருவிழா **19.06.2018** முதல் **27.06.2018** அன்று வரை நடைபெற உள்ளது. இத்தேர் திருவிழா நடைபெறும் நாளில் காவல்துறையினர் சட்டம்–ஒழுங்கினை பராமரித்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், வாகன போக்குவரத்தினை மாற்றுப் பாதையில் செல்ல தகுந்த முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, தேரோட்டம் நடைபெறும் **27.06.2018** அன்று மாநகராட்சி, மற்றும் நெடுஞ்சாலைத் துறையினர் நான்கு ரதவீதிகளில் திருத்தேர் பதியா வண்ணம் முன்னதாகவே சாலைகளை பழுது நீக்கம் செய்திட வேண்டும். மாநகராட்சி சார்பில் திருவிழா நாட்களில் குடிநீர் இணைப்புகளில் தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்திட வேண்டும். தற்காலிக கழிப்பிட வசதிகளை ஏற்பாடு செய்திட வேண்டும். மேலும், நான்கு ரதவீதிகளில் மருத்துவக் குழு அமைத்திட வேண்டும். மின்சார வாரியத்தினர் மின்தடங்கள் நிகழா வண்ணமும், தேரோட்டத்தின் போது மின் கம்பிகளால் இடையூறு இல்லாத வகையில் பாதுகாப்பு செய்திட வேண்டும். போக்குவரத்து துறையினர் சிறப்பு பேருந்துகளை இயக்கிட ஏற்பாடு செய்ய வேண்டும். அறநிலையத் துறையினர், கோவில் நிர்வாகத்தினருக்கு தேவையான அறிவுரைகளை வழங்கி திருத்தேர்களை இழுப்பதற்கு நல்ல வடங்களை ஏற்பாடு செய்து, தேரை நிலைக் கொண்டு சேர்ப்பதற்கு திறமையான பணியாளர்களை பணியில் அமர்த்திட வேண்டும். மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால், உடன் தற்காலிக விளக்குகள் மற்றும் ஜெனரேட்டர் ஏற்பாடு செய்திட வேண்டும். தேரோட்டத்தையொட்டி முக்கிய இடங்களில் கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தீயணைப்புத் துறையினர் தீ தடுப்பு மற்றும் மீட்பு பணிகளுக்கு தேவையான முன்னேற்பாடுகளை செய்திட வேண்டும். **27.06.2018** அன்று தேரோட்டத்தின் போது ரதவீதி மற்றும் அருகிலுள்ள மதுக்கடைகளை மூடிவைக்க வேண்டும். அனைத்து தரப்பினரும் இணைந்து சிறப்பாக செயல்பட்டு, தேரினை ஒரே நாளில் தேர் நிறுத்தும் இடத்திற்கு வந்து சேர்த்திட, பொது மக்கள் அனைவரும் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற ஒத்துழைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப.,, அவர்கள் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாநகர காவல் துணை ஆணையர் திரு.சுகுணாசிங்,இ.கா.ப., திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கணேஷ்குமார், மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், மாநகராட்சி உதவி ஆணையர் திருமதி.சுப்புலெட்சுமி, உதவி செயற்பொறியாளர் திரு.சாமுவேல் செல்வராஜ், அருள்மிகு சுவாமி நெல்லையப்பர்– அருள்தரும் காந்திமதி அம்மாள் திருக்கோவில் செயல் அலுவலர் திருமதி.பா.ரோஷினி, உள்பட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.